Unaip Padum Thozhil Indri Veru Illai
Enai Kakka Unaiyindri Yarumillai

Unaip Padum

Muruga Muruga
Karpanaiyil Varugindra Sorpadhame-Anbu
Karunaiyil Uruvana Arpudhame
Sirpach Chilaiyaga Nirpavane –Vellai
Thiruneeril Arulana Virpanane
Muruga Muruga

Unaip Padum

Amudham Irukkindra Porkudame-Iyarkai
Azhagu Vazhigindra Ezhil Vaname
Kumudha Idhazh Virindha Poochcharame -Undhan
Kurunagai Thamizhukku Thiruvarame
Muruga Muruga

Unaip Padum

Lyrics in Tamil

உனைப் பாடும் தொழில் இன்றி வேறு இல்லை
எனை காக்க உனையின்றி யாருமில்லை

உனைப் பாடும்

முருகா முருகா

கற்பனையில் வருகின்ற சொற்பதமே-அன்பு
கருணையில் உருவான அற்புதமே
சிற்பச் சிலையாக நிற்பவனே-வெள்ளை
திருநீறில் அருளான விற்பனனே
முருகா முருகா

உனைப் பாடும்

அமுதம் இருக்கின்ற பொற்குடமே-இயற்கை
அழகு வழிகின்ற எழில் வனமே
குமுத இதழ் விரிந்த பூச்சரமே-உந்தன்
குறுநகை தமிழுக்கு திருவரமே
முருகா முருகா

உனைப் பாடும்